# கல்வியமைச்சு – விவசாய மற்றும் சுற்றாடல் கல்விக் கிளை

## க.பொ.த ( உ. தர ) பரீட்சை – முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் 2021

**உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் II** | 66 | T | II

### பகுதி B – கட்டுரை

**அறிவுறுத்தல்கள்:**

❖ **நான்கு வினாக்களுக்கு** மாத்திரம் விடை எழுதுக.

5 a. கால்நடை வளர்ப்பில் வானிலை காரணிகளின் பிரதிகூலமான தாக்கங்களை விவரிக்க.

b. சங்கிலி நில அளவையில் அளவுநாடாவின் நீளத்திலும் கூடிய நீளத்தை தளக்கோடாகப் பயன்படுத்த வேண்டி ஏற்படுமாயின் அளவுநாடாவைப் பயன்படுத்தி அதனை அளக்கும் முறை பற்றி விவரிக்க. .

c. அரிமரம் பதப்படுத்தலின்போது ஏற்படக்கூடிய பழுதுகள் (அரிமரம் விகாரமடைதல்) தொடர்பாக விளக்குக.

6 a. "மரம் அல்லாத வன உற்பத்தி" கைத்தொழிலை விருத்தி செய்வதில் உள்ள தடைகளையும் அத்தடைகளை இழிவு படுத்துவதற்காக எடுக்கக்கூடிய செயற்பாடுகளையும் விளக்குக.

b. பயிரொன்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பொருத்தமானவாறு நிலத்தைப் பண்படுத்த வேண்டும். நிலம் பண்படுத்தும்போது ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தக்கூடிய நிலம் பண்படுத்தல் உபகரணங்கள் இரண்டு வீதம் குறிப்பிட்டு பல்வேறு நிலம் பண்படுத்தல் நுட்ப முறைகளை விவரிக்க.

c. பாதுகாப்பில்லத்தில் மண்ணின்றிய பயிர்ச்செய்கை முறையொன்றை மேற்கொள்ளும்போது ஏற்படும் எல்லைப்படுத்தும் காரணிகளை விளக்குக.

7 a. நீர் வளங்களை பாதுகாப்பது, அவற்றின் வினைத்திறனான பயன்பாட்டை நோக்காகக் கொண்டு மழைநீரை சேகரித்து பாதுகாக்கும் அமைப்பொன்றை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை விளக்குக.

b. கைத்தொழில் கழிவு நீரில் அடங்கியுள்ள சேர்வைகள் பல்வேறு கைத்தொழில்களுக்கமைய வேறுபடுவதால் அதற்கேற்ப பரிகரிப்பு செயன்முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேறுபாடுகளை விவரிக்க.

c. FC 28 ஈரலிப்பு உணரி, ஆடினோ பலகை ஆகியவற்றின் துணையுடன் அமைக்கப்பட்ட மூடிய நீர்ப்பாசனத் தொகுதியொன்றை உதாரணமாக வைத்து கட்டுப்பாட்டு முறைமையொன்றின் துணைச்சாதனங்களையும் செயன்முறைகளையும் விளக்குக.

8 a. வணிகரீதியான பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் நான்கு வகையான நாற்றுமேடைகளைக் குறிப்பிட்டு அவற்றை அமைப்பது தொடர்பாக விவரிக்க.

b. பயிர்ச்செய்கைக்காக மண் அங்கிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய விவசாய ரீதியில் முக்கியத்துவம் கொண்ட உற்பத்திகளை விளக்குக.

c. மையநீக்கம் செய்த றப்பர் பாலினால் பலூன் உற்பத்தி செய்யும் முறைை யபாய்ச்சற்கோட்டுப் படமொன்றின் துணையுடன் விளக்குக.

9 a. கறவை மாடு வளர்ப்பில் "நவீன தொழினுட்ப முறைகளைப்" பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் விளக்குக.

b. ஏற்றுமதிக்காக அந்தூரியம் பூக்களைத் தயார் செய்கையில் அறுவடை செய்வது தொடக்கம் களஞ்சியப்படுத்தும் வரையான செயன்முறையை விவரிக்க.

c. பொதியிடலில் பயன்படுத்தப்படும் "உயிர்ப்பிரிந்தழிதலுக்கு உட்படக்கூடிய பொதியிடல் பதார்த்தங்களைக்" குறிப்பிட்டு அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

10 a. அறுவடை செய்த மீன்களின் தரத்தைப் பேணுவதற்கு அவற்றை அறுவடை செய்தது தொடக்கம் நுகரும் வரை சரியாகக் கையாளும் முறை பற்றி விவரிக்க.

b. சுகாதாரப் பாதுகாப்பற்ற உணவினால் மனிதனின் சுகாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கு எடுக்க முடியுமான நடவடிக்கைகளையும் உதாரணங்களுடன் விளக்குக.

c. வெற்றிகரமான முயற்சியாண்மையாளரொருவருக்கு இருக்க வேண்டிய இயல்புகளை விவரிக்க.